# அமைதியின் தெய்வமே இறைவா

அமைதியின் தெய்வமே இறைவா
என் இதயத் தலைவனே
அருள்வாய் அருள்வாய் - யாம்
ஏங்கித் தேடுகின்ற அமைதி
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி

**1**
நீதிப் பாதையில் நடப்பவர் சுவைப்பது
அமைதி அமைதி
தியாக சிகரத்தில் நிலைப்பவர் பெறுவது
அமைதி அமைதி ( 2 )
அன்பு மொழியை விதைத்திடுவோர்
அருளின் பயிரை அறுத்திடுவார் ( 2 )
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி

**2**
உறவைப் பேணியே உரிமைகள் காத்தால் அமைதி அமைதி
உயிரை மதித்தால் உண்மையில் நிலைத்தால்
அமைதி அமைதி ( 2 )
ஓங்கும் வன்முறை ஒழித்திடுவோம்
வீங்கும் ஆயுதம் களைந்திடுவோம் ( 2 )
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி